கோமரங்கடுவெல பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 03 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 ஆகஸ்ட் 15 ஆம், 2019 ஒக்டேபர் 10 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 கோமரங்கடுவெல பிரதேச சபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு வெலவாகிய ரூபா. 1,528,889 ஆன தொகை கணக்கிடப் பட்டிருக்கவில்லை. | முறையாகக் கணக்கிடப்படல் வேண்டும். | இத் தொகை 2019 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கறிக்கையில் சீர் செய்யப்படும். |

#### 1.3.2 இனங்காத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 04 வைப்பு கணக்குகள் மற்றும் அதற்குரிய உப ஏடுகளுக்கிடையில் ரூபா.170,725 இனங்காது கானப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளுக்கான கணக்குகளை சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

1.3.3 கணக்காய்விற்க்த் தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவைன தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் ரூபா.130,621 ஆன வைப்புக்கள்கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்தமுடியாதுள்ளது. | கணக்கு மீதிகளை இனங்கான்பதற்குத் தேவையான சான்றுகள் கணக்குகளுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உப பதிவேடுகள் சரிபாக்கப்பட்டு 2019 ஆம் வருத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கக்பட்டுள்ளது. |

1.4 இணங்காமைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம். | | | |
| (i) நிதப் பிரமானம் 396 (இ) | 06 மாதங்கள் கடந்துள்ள ரூபா.4,418 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிதப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதப் பிரமானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) நிதப் பிரமானம் 571 | இரண்டு வருடங்கள் கடந்துள்ள ரூபா.434,870 ஆன வெவ்வேறு வைப்புக்கள் மற்றும் 37 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை வேற்கொள்ளப்படாமல் கானப்பட்டது. | நிதப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதப் பிரமானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) நிதப் பிரமானம் 880 | பிணை வைப்பிட வேண்டிய 05 உத்தியோகத்தருயைய பிணைப்பணம் வைபுச்செய்யப்படவில்லை. | நிதப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதப் பிரமானத்தின் பிரகாரம் உத்தியோகத்தர் ஐவரின் பிணைப்பணத்தை வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை இவ் வருட இறுதிக்குள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** நிதிப் பிரமானம் 1645 (ஆ) மற்றும் 1646 | 13 வாகனங்களுக்கான ஓட்ட அட்வனைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப் படவில்லை | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் மாதத்தில் இருந்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| ஆ) 1988 ஆம் வருட பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) 217 ஆவது விதி | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேனப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேனப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேனப்பட்டிருந்த போதிலும் அதை முறையாக பேனுவதற்கு பதவியனியினர் இல்லாதிருந்ததுடன், எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) 218 ஆவது விதி | அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் வருடத்திற்கு ஒரு தடவை மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | பதவியனியினர் இல்லாதிருந்ததுடன், எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 3,217,338 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,729,746 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீத வரிகள் மற்றும் வரி | 50 | 31 | 31 | - | - | - | - | - |
| வாடகை | 2,265 | 3,336 | 3,647 | 188 | 1,860 | 1,964 | 1,858 | 106 |
| அனுமதிப்பத் திரக் கட்டனம் | 126 | 124 | 124 | - | 119 | 130 | 130 | - |
| வேறு வருமானம் | 1,404 | 2,259 | 2,259 | 5,453 | 1,158 | 1,754 | 1,754 | - |

## 2.2.2 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான முத்திரை வருமான நிலுவைகளை அடையாளம்கண்டு அவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படடிருக்கவில்லை | வருமானத்திற்குரிய முத்திரை கட்டணத்தை அடையாளங் கண்டு சரியாக நிலுவை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு முத்திரை வருமான அறவீடு தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

## 2.2.3 வாடகை வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகள் மற்றும் வாடகை வீடுகளின் மாதாந்த வாடகை ரூபா 1,580 இற்கும் ரூபா 2,180 இற்கும் இடையில் கானப்பட்டது. இருப்பினும் அந்த கடைகள் வாடகை வீடுகள் மீண்டும் மதிப்பிடப்பட்டு தற்காலத்திற்கு பொருத்தமான வாடகை ஒன்றை அறவிடுவதற்கும் மற்றும் ரூபா. 188,414 நிலுவை வாடகையை அறவிடுவதற்கு சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கடைகள் மற்றும் வாடகை வீடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் வருடத்தின் முதல் பகுதியாகும்போது சுமார் 75% ஆன நிலுவை வாடகை அறவிடப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் வருடத்தில் சபைக்குரிய கடைகள் மற்றும் வாடகை வீடுகளினை பெறுகை நடைமுறையின் ஊடாக வாடகைக்கு விடப்பட்டு தற்காலத்திற்கு பொருத்தமான வாடகை ஒன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரசட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிக் விதிக்கப்பட வேண்டிய இருப்பினும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியின் போது சபையினால் உப விதியை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை உருவாக்குவதுடன் அதற்கான அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து கிழக்குமாகனங்களிலும் உள்ளுராட்சி நிறுவனங்களில் இதுவரை அங்கரிக்கப்பட்ட உப உருவாக்கப்படவில்லை இருப்பினும் இதுதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014சபையினால் இலக்க அரசநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதவியனி உத்திகோகத்தர்களின் போதுமான அளவு கிடைத்த பின்னர் உடனடியாக இவ் திட்டம் தயாரிக்கப்படும். |

**(இ) வேலைகள் நிறைவேற்றப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபை நிதியிலிருந்து எவ்வித அபிவிருத்தி செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப பட்டிருக்கவில்லை | வருட ஆரம்பத்தில் இருந்து முறையான திட்டத்திற்கு அபிவிருத்தி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். | தொழினுட்ப உத்தியோகத்தரின் பற்றாகுறை காரனமாக நடமுறைப்படுத்த முடியவில்லை இருப்பினும் இவ் வருடத்தில் |

| | | |
|---|---|---|
| | | இதுதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |

(ஆ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல் 2000 இலக்கம் 53 மற்றும் 1998 இலக்கம் 56 உடைய சட்டங்களின் திருத்தங்கள் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்திற்கு அணுகூலமாக சுற்றாடலுக்கு குப்பை ஏற்படுத்தும் அச்சுத் தொழில், லொக் கல் உற்பத்தி மற்றும் நெல் ஆலை போன்ற தொழிற்முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டுமெனினும், சபை கட்டுப்பாட்டு எல்லைக்குள் அப்படியான தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடொன்று மீளாய்வாண்டிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 19 தொழில்முயற்சிகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விலக்களிக்கப்பட்டிருந்தது. | சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தொழிற்முயற்சிகள் தொடர்பாக வருடாந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | 2018 ஆம் வருடத்தில் வருமான பருசோதகர் இல்லாது இருந்ததுடன் தற்போது தற்காலிகமாக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆகையால் அவர் மூலமாக இதுதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை சபை தயாரித்து அதுதொடர்பாக முன்னேற்ற நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | சபைக்குரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இணங்கண்டு அவற்றை அடைவதற்குரிய நடவடிக்கைகளை சபையினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இது தொடர்பாக சபையினால் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டிய ரூபா. 362,870 ஆன தொகையானது கட்டுப்பண அடிப்படையில் 08 உள்ளுராட்சி உறுப்பினருக்கு வழங்கப்பட் இரு சக்கர மோட்டார் வாகன கட்டுப்பணம் பொது திறைசேரியின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட பணத்தொகையானது தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். | குறிப்பிடப்பட்ட பணத்தொகையானது தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு . நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் 14 ஆளணி வெற்றிடத்தில் 08 மட்டுமே இதுவரை நிரப்பப்பட்டுள்ளது. மிகுதி வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பாக சபை எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சபைக்குரிய ஆளணியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டல் வேண்டும். | வெற்றிடத்தை திரப்புவதற்கான அனைத்து விடையங்களும் பொது நிர்வாக திணைக்களத்திடமும் மற்றும் உள்ளுராச்சி ஆணையாளரிடமும் கோறப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் உள்ளூராச்சி அதிகாரசபை மற்றும் உள்ளூராச்சி நிதியின் பங்களிப்பில் ரூபா.283,998 பெறுமதியான அலுவலக தளபாடங்கள் முன் அலுவலக செயறறிட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அச்செயற்றிட்டம் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை. | முன் அலுவலக செயறறிட்டத்தினை நடைமுறைப் படுத்தப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆளனி பற்றாக்குறை காரனமாக இச்செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்ததுவதில் சிக்கல் நிலை கானப்படுகின்றது. அலுவலக தளபாடங்கள் கிடைக்கப்பெற்ற போதிலும் அதற்கான ஆளனி வளம் கிடைக்கப்பெறவில்லை. |

3.5 சொத்து முகாமைத்துவம்

பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| சபையில் காணப்படும் மோட்டார் வாகனம், ஒரு உழவு இயந்திரம், ஒரு பளைய தண்ணீர் கொண்டு செல்லும் தாங்கி என்பன 03 வருடங்கள் தொடக்கம் 06 வருட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த செத்துக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கையினை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த வாகனங்கள் திருத்தி பாவிக்க முடியாத நிலையில் கானப்படுகின்றன மற்றும் இவற்றை அகற்றுவதற்காக கடந்த காலங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

3.6 பெறுகை

பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/28 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையானது 2018 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | பொருட் கொள்வனவு திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட வேண்டும். | ஆளணி பற்றாக்குறை காரனமாக இச்செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்ததுவதில் சிக்கல் நிலை கானப்படுகின்றது. ஆளணி வளம் கிடைக்கப்பெறற்றபின் நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன . |